DINAKARAN 24 AUG 09



ஈஷா யோகா மையத்தின் பசுமைக் கரங்கள் திட்டத்தின் கீழ், திருப்பூரில் 25 ஆயிரம் மரம் நடுவிழா திருப்பூர் டவுன்ஹால் வளாகத்தில் நேற்று காலை நடந்தது. துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மரக்கன்றை நட்டு திட்டத்தை துவக்கிவைத்தார். அருகில் ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ், அமைச்சர்கள் பொன்முடி, மு.பெ.சாமிநாதன், பூங்கோதை, பொங்கலூர் பழனிசாமி, கலெக்டர் சமயமூர்த்தி, மேயர் செல்வராஜ், கோவிந்தசாமி எம்எல்ஏ, 15 வேலம்பாளையம் பேரூராட்சி தலைவர் மணி, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் செல்வராஜ், நடிகர் பிரகாஷ் ராஜ், நடிகை ஸ்ரேயா உட்பட பலர் உள்ளனர்.

# திருப்பூரில் 25 ஆயிரம் மரக்கன்று நடும் திட்டம்

## ஸ்டாலின் துவக்கினார்

திருப்பூர், ஆக. 24: திருப்பூரில் ஈஷா யோகா மையம் சார்பில், 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கிவைத்தார்.

ஈஷா யோகா மையத்தின் பசுமைக் கரங்கள் திட்டத்தின் கீழ், திருப்பூரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா திருப்பூர் டவுன்ஹால் வளாகத்தில் நேற்று நடந்தது. தமிழக அமைச்சர்கள் பொன்முடி, மு.பெ.சாமிநாதன், பூங்கோதை, பொங்கலூர் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மரத்தை நட்டு பணிகளை துவக்கி வைத்தார்.

ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் தலைமை தாங்கி பேசினார்.

திருப்பூர் கலெக்டர் சமயமூர்த்தி, எம்.எல்.ஏ. கோவிந்தசாமி, மேயர் செல்வராஜ், துணை மேயர் செந்தில்குமார், 15 வேலம்பாளையம் பேரூராட்சி தலைவர் மணி, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க தலைவர் சக்திவேல், தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்க தலைவர் வைக்கிங் ஈஸ்வரன், வளம் அமைப்பு தலைவர் கிருஷ்ணசாமி, நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகை ஸ்ரேயா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிருபர்களிடம் கூறுகையில், "ஈஷா மையத்தை சேர்ந்தவர்கள் தொடர்ந்து மரக்கன்று நட்டு சுற்றுப்புற சூழலை பாதுகாக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. தற்போதைய சூழலில் இது அவசியமானது. இது கட்டாயம் சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்கும்," என்றார்.

பின்னர், மாரத்தான் போட்டி நடந்தது. திருப்பூர் டவுன்ஹால் வளாகத்தில் இருந்து துவங்கிய மாரத்தான் ஓட்டத்தை நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகை ஸ்ரேயா ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.